**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.445** **நாள் : 17.12.2025**

**பெண்கள் பாதுகாப்பு மற்றும் பொதுச் சாலைகள், போக்குவரத்து இடங்களில் பாதுகாப்பான சூழலை உருவாக்க காவல்துறை, சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்படும் வகையில் காவல்-சமூக கூட்டரங்கம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பெண்கள், சிறுமிகள் உள்ளிட்ட அனைத்து பாலினங்களும் தன்னம்பிக்கை, மரியாதை மற்றும் பாதுகாப்புடன் நகரத்தில் வாழும் சூழலை உருவாக்குவதில் பெருநகர சென்னை மாநகராட்சி தொடர்ச்சியான பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெண்கள் மற்றும் சிறுமிகள் பாதுகாப்பாக, மரியாதையுடன் வாழும் நகரத்தை உருவாக்கும் நோக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் "16 நாள் உலகளாவிய பாலின அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம்" (16 Days of Activism Against Gender-Based Violence) பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உலகளாவிய பாதுகாப்பு இயக்கமாக "அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான டிஜிட்டல் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றுபடுங்கள்" ("Unite to End Digital Violence Against All Women and Girls") என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு, பெண்ணுரிமை பேணுவோம், பெண்கள் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவோம் என்ற முழக்கத்துடன் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகத்தின் (Gender & Policy Lap) சார்பில் பெண்கள் பாதுகாப்பு, பொதுச் சாலைகள், போக்குவரத்து இடங்களில் பாதுகாப்பான சூழலை உருவாக்க காவல்துறை, சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்படும் வகையில் "பாதுகாப்பான மற்றும் பெண்களுக்குப் பொருத்தமான சென்னை"

என்ற கருப்பொருளுடன் காவல்-சமூக கூட்டரங்கம் (Police-Community Roundtable) இன்று (17.12.2025) கோயம்பேடு, சூப்பர் டவுன்ஹவுஸில் நடைபெற்றது.

இந்தக் கூட்டரங்கில் பொதுப் போக்குவரத்து, தெருக்கள் டிஜிட்டல் இடங்கள், சமூக ஈடுபாடு உள்ளடக்கிய பாதுகாப்பான சென்னையும் அதன் புரிதல் குறித்தும், பெண்கள் பாதுகாப்புக்கான புகார்கள் செய்ய எளிமையான வழிமுறைகளுக்கான புகார்கள் மற்றும் உதவி சேவைகள் குறித்தும், தகவல் பரப்பும் முகாம்கள், ஹெல்ப் லைன்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் ஆதரவு, சமூக ஒத்துழைப்பு குறித்தும், சம்பவங்களை பாதுகாப்பாக புகாரளிக்க ஏதுவாக திடீர் சாட்சியர்கள் நடவடிக்கைகள் (Bystander Intervention) குறித்தும், காவல்துறை-சமூக ஒத்துழைப்பினை வலுப்படுத்துதல், பொதுச்சாலை மற்றும் போக்குவரத்து இடங்களில் பாதுகாப்பு ஆய்வுகள், தொழில்நுட்ப வசதிகள், சமூக தலைவர்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளை இணைத்து பெண்களுக்கான தோழமையான இடங்களை உருவாக்குவது குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன கூடுதல் இயக்குநர் திரு. சக்திவேல், காவல் உதவி ஆணையாளர் செல்வி ரித்து, சமூக பாதுகாப்புத் துறையைச் சார்ந்த குழந்தைகள் நலக் குழுவின் உறுப்பினர்கள் திரு.லாரன்ஸ், திரு.பத்மநாபன், நலிவடைந்த நகர்ப்புற சமூகங்களுக்கான தகவல் மற்றும் வள மையத்தின் நிறுவனர் திருமதி வனேசா பீட்டர், பெண்கள் மற்றும் குழந்தைகள் உரிமை ஆர்வலர் திரு. ஆன்ட்ரூ, சமூக நலத்துறையின் மாநில பணி ஒருங்கிணைப்பாளர் திரு. எழிலன், ஐபிஇ குளோபல் பாலின நிபுணர் திருமதி எஸ்தர் ராணி, மாநகராட்சி பாலின மற்றும் கொள்கை ஆய்வக குழுத் தலைவர் முனைவர் லெஜிஸ், தோழமை தொண்டு நிறுவன நிதி மேலாளர் திருமதி டயனா டாலி, திட்ட அலுவலர் திருமதி பெனிட்டா, அருணோதயா ஆலோசகர் திருமதி செல்லம்மாள், சமூக அமைப்பாளர் திருமதி லோகநாயகி மற்றும் அலுவலர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**